**<u>தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்</u>**

<u>C.C. No. 150 /2025</u>

LW :5 PW : 3

2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 06 ம் தேதி ஆணையுறுதி சட்டம் 1969 பிரிவு 4 ன் படி திருமதி. Dr. R. லதா, M.A.,M.L.,Ph.D., தலைமை நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | நாராயணசாமி | த / பெ. | ராமகிருஷ்ணன் |
| கிராமம் | : | ஜாம்புவான்வோடை | தாலுக்கா | முத்துப்பேட்டை |
| தொழில் | : | விவசாயம் | வயது | 76 |

<u>06.11.2025.</u>

<u>LW : 5 PW :3</u>

<u>1 ம் எதிரி இறந்துவிட்டார். 2 மற்றும் 3 எதிரிகள் ஆஜர், அரசு வழக்கறிஞர், எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.</u>

**முதல்விசாரணை**

நான் ஜாம்புவான்வோடையில் குடியிருந்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். திருத்துறைப்பூண்டி வட்ட கூட்டுறவு வீட்டுவசதி கடன் சங்கத்தில் நடுத்தர வருவாய்பிரிவில் வீடுகட்ட ரூ.80 ஆயிரம் கடன்பெறுவதற்கு மனுகொடுத்திருந்தேன். மனுவை சங்க செயலாளர் ராமநாதன் பெற்றுக்கொண்டார். பிறகு எனது வீட்டுமனையை சங்கப்பெயரில் அடமான பத்திரம் செய்துகொடுக்கசொன்னார். நான் முத்துப்பேட்டை சார்பதிவாளர் அலுவலகத்தில் எனது வீட்டுமனையை சங்கத்தின்பெயரில் பதிவுசெய்துகொடுத்தேன்.

நான் பலமுறை சென்று பணம் கேட்டும் சங்கத்திலிருந்து பணம் கொடுக்கவில்லை. சங்க தனிஅலுவலர் ஜோதிகுமார் அவர்கள் ஒருமுறை

என்னிடம் ரூ.40 ஆயிரத்திற்கான காசோலையை வழங்கினார். அந்த காசோலையை மத்திய கூட்டுறவு வங்கியில் செலுத்தி பணம் கேட்டபோது போதிய பணம் இல்லை என காசோலையை திருப்பி கொடுத்துவிட்டார்கள். அந்த காசோலையை நான் ஜோதிக்குமாரிடம் திருப்பி கொடுத்தேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் **காசோலை எண் 085450 நாள் 16.05.1995 தான் அது. அது அதசாஆ 5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

பின்னர் பலமுறை அலைந்து கேட்டு ரூ.20 ஆயிரத்திற்கான காசோலையை பெற்று வங்கியில் செலுத்தி ரூ.20 ஆயிரம் பெற்றுக்கொண்டேன். அந்த **காசோலை எண் 016272 நாள் 15.11.1995 தற்போது என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் காசோலைதான் அது அதசாஆ 6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

அதன்பின்பு ரூ.25 ஆயிரத்திற்கான காசோலையை பெற்று வங்கியில் செலுத்தி ரூ.25 ஆயிரம் பெற்றுக்கொண்டேன். அந்த **காசோலை எண் 016447 நாள் 08.03.1996 தற்போது என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் காசோலைதான் அது அதசாஆ 7** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

ஆக மொத்தம் நான் பெற்றுக்கொண்ட தொகை ரூ.45 ஆயிரம். இதை தவிர நான் வேறு பணம் எதுவும் பெறவில்லை. காசோலை எண் 081740 தேதி 08.02.1995 ரூ.25 ஆயிரம் மற்றும் காசோலை எண் 085106 தேதி 10.03.1995 ரூ.48 ஆயிரம் ஆகிய காசோலைகளில் எனது கையொப்பத்தை யாரோபோட்டு ரூ.73 ஆயிரத்தை மொத்தமாக எடுத்துள்ளார்கள். பிரிவு 81 விசாரணை அதிகாரி என்னை விசாரித்தார். அவரிடம் நான் வாக்குமூலம் கொடுத்தேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் வாக்குமூலம் நான் கொடுத்ததுதான். வாக்குமூலத்தில் 3 பக்கங்களில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். நான் கொடுத்த வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். **வாக்குமூலம் மற்றும் கையொப்பம் அதசாஆ 8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

சாட்சி கூறியதை என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு அதை சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அது சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

தலைமை நீதித்துறை நடுவர்,
திருவாரூர்.

LATHA G

Digitally signed by LATHA G
Date: 2025.11.19 14:01:04 +0530